*Registered as a Newspaper in Sri Lanka No. A 13*

# ஐக்கியதீபம்

தேசீய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 30

இதழ் : 7

பங்குனி

1975

## இந்த இதழில்....

○ ஆசிரியர் தலையங்கம்

○ ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை வருடாந்த அறிக்கை

○ இலங்கைக் கூட்டுறவு இயக்கம் : தோற்றுவாயும் வளர்ச்சியும்

○ கூட்டுறவுக் கல்வி

JAFFNA 06.5.75

யாழ்ப்பாணம்

POSTAGE CEYLON REVENUE RS. CTS 0.10

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 30 || யாழ்ப்பாணம், பங்குனி 1975 || இதழ் 7

## உஷார் நிலையில் தொடர்ந்தும் இருப்போமாக!

உணவுத்பத்திப் போர் பிரகடனம் செய்யப்பட்டபின் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படத்தொடங்கியதினால் இந்நாட்டு மக்கள் அனைவரும் தவிர்க்கமுடியாத உஷார் நிலையில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உணவுப்பஞ்சம் மக்களுக்குப் பெரும் துயரங்களை ஏற்படுத்திய போதிலும் நீண்டகால நோக்கிலே நன்மையும் இல்லாமல் இல்லை. பிறநாடுகளிலே எமக்கு வேண்டிய உணவுகளைப் பெறுவதற்கு நம்பியிருக்கும் நிலை மாறி நாமே நமக்கு வேண்டிய உணவினை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற திடசங்கற்பத்தோடு மக்கள் உணவுற்பத்தியில் ஈடுபடலாயினர். ஆயினும் வானம் பொய்த்ததினால் மக்களுடைய கடும் உழைப்பிற்கேற்ற பயன் கிட்டவில்லை.

இந்நிலையிலே மா போன்ற உணவுப் பொருள்களைத் தாராளமாக வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளமை எல்லோருக்கும் ஆறுதல் அளிக்கும் என்பது திண்ணம். கியூவில் நின்று பாண் வாங்கத் தவித்த மக்கள் இப்பொழுது அந்த அவல நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டதை மனிதாபிமானம் படைத்த எவரும் வரவேற்பர்;

எனினும் நீண்ட கால நோக்கிலே இப்பொழுது பாவனையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் ஓர் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கலாம். வெள்ளம் வந்த பிறகுதான் விழிப்படைந்து ஓடுவது போல் நாம் தீவிரமாக உணவு உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினோம். இந்நிலையிலே ஓரளவாவது எமது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய பொழுது வெளிநாடுகளிலிருந்து தாராளமாக

மா போன்ற உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன என்பதனால் எமது மக்களின் உணவுப் போராட்டம் தளர்ச்சியடையக் கூடியது இயல்பே. இந்த ஆபத்தைத் தான் நாம் இங்கு எடுத்துக்கூற விரும்புகின்றோம்:

இரண்டாம் உலகப் போர் காலத்திலேதான் எமது மக்கள் அமெரிக்கன் மா என்னும் கோதுமை மாவை வேறு வழியின்றி உண்ணப் பழகினர். இன்றோ நிலைமை நேர் மாறாகி அஃதின்றி வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,

வெளிநாட்டவர் எமது நாட்டைக் கைப்பற்ற முன்பு நாம் நெல்லுடன் குரக்கன், வரகு போன்ற சிறுதானியங்களை விளைவித்து எமது தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன், எமது உடல்நலனையும் பேணிக் காத்துக்கொண்டோம். ஆனால், கோதுமை மா புழக்கம் வந்த பின்பு எமது உப தானிய உற்பத்தி கைவிடப்பட்டதுடன் (இஃது இலங்கை முழுவதிலுமே நடைபெற்ற பெரும் மாற்றத்தின் பிரதிபலிப்பு எனலாம்) எமது உடல் நிலையும் பாதிக்கப்பட்டமை வரலாறு அறிந்த உண்மையே.

உணவுப் போர் பிரகடனம் செய்யப்பட்டதும் குரக்கன் போன்ற உப உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு எமது விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர்: இதனால் இன்றே குறிப்பாக தென்பகுதியிலே உள்ள பல ப. நோ: கூ. சங்கங்களிலே குரக்கன் மா தேங்கிக்கிடக்கின்றதென பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

இத்தகைய நிகழ்வுகள் எமது விவசாயிகளை ஊக்கமிழக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

இதே போன்று இன்று யாழ் மாவட்டத்திலே பனங்கட்டியும், பனம் பண்டங்களும் பெருமளவில் உற்பத்தியாகி வருகின்றன. இந்நிலையில் சீனி விலை குறைக்கப்பட்டால் எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கதி என்ன? இதனை தீர்க்கமாக நாம் யோசிக்க வேண்டும்.

நீண்டகால நலன்களையும் குறுகியகால நலன்களையும் சமநிலைப்படுத்துவது அரசின் கடமை. கூட்டுறவு இயக்கம் இதில் அரசுடன் ஒத்துழைத்து ஆவன செய்ய வேண்டும்.

நாம் உணவு உற்பத்திப் போரிலே வெற்றிபெற வேண்டுமாயின் தற்காலிக சலுகைகளையும் நன்மைகளையும் கருதாது. எமது கையே எமக்கு உதவி என்ற கோட்பாட்டின் நம்பிக்கை தளராது உழைக்க வேண்டும். இப்பணியில் கூட்டுறவு இயக்கத்திற்கு தலையாய பொறுப்புண்டு.

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை
# யாழ்-மாவட்டக்குழு
# வருடாந்த அறிக்கை

யாழ் மாவட்டக்குழு சென்ற ஆண்டறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது. கடந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குப் பின்பு ஏழு மாவட்டக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டுறவு அறிவும், கூட்டுறவு வாழ்வும் மக்களிடையே மலர்வதற்கு இக்குழு முயற்சி எடுத்துள்ளது.

## யாழ் மாவட்டக்குழு உறுப்பினர்கள்

1. திரு. சு கந்தையா (தலைவர்) மாதகல் வடமேற்கு ஐ: தா. ச.
2. ,, க. இ. குமாரசாமி (உபதலைவர்) வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்
3. ,, இ. பொ. குமாரசாமி திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கம்
4. ,, ச. முருகேசு புலோலி ப நோ, கூ. சங்கம்
5. பண்டிதர் அ. பொன்னுத்துரை வேலணை ப. நோ. கூ. சங்கம்
6. திரு. த. கனகராசா வடபகுதி பாற்பண்ணைக் கூட்டுறவுச்சங்கம்
7. ,, இ. சபாலிங்கம் (நியமனம்) அதிபர், யாழ் இந்துக்கல்லூரி
8. ,, கே: தில்லைநாதன் (நியமனம்) உள்ளூராட்சி உ. ஆ. ஆணையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்
9. ,, வே. இ. சண்முகம் (நியமனம்) காரியாலயப்பரிசோதகர், கூ: ஆ. ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்

உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களின் தொகை 63

| | |
|---|---|
| ப. நோ. கூ. சங்கம் | 21 |
| கடற்றொழிலாளர் கூ. சங்கம் | 5 |
| பாற்பண்ணைச் சங்கம் | 1 |
| விவசாயக் கூட்டுறவுச் சங்கம் | 1 |
| புத்தக வெளியீட்டு விற்பனவுச் சங்கம் | 1 |
| சிகரெட் புகையிலை உ வி கூ சங்கம் | 1 |
| கைத்தொழில் கூ. சங்கம் | 1 |
| துறைமுகச் சேவைகள் சமாசம் | 1 |
| ஏனைய சங்கங்கள் | 31 |
| | 83 |

## கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புகளும்

கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புகளையும் ப. நோ. கூ. ச. ஊழியர்களுக்கும், கிளைக்குழு உறுப்பினர்களுக்கும், நெறியாளர் குழுவினருக்கும் நடாத்தி வருவதன் பயனாக அவர்கள் கூட்டுறவு அறிவு வாய்ந்தவர்களாகச் சேவை புரிந்து வருகின்றனர். ஊழியர்களுக்கு கருத்தரங்குகள் பின்வரும் சங்கங்களில் நடாத்தப்பட்டன.

1. தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
2. சங்கானை ப. நோ. கூ. சங்கம்
3. பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

கிளைக்குழு உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தென்மராட்சி கிழக்கு | ப. | நோ. | கூ. | சங்கம் |
| கட்டைவேலி நெல்லியடி | ,, | ,, | ,, | ,, |
| தென்மராட்சி மேற்கு | ,, | ,, | ,, | ,, |
| புங்குடுதீவு | ,, | ,, | ,, | ,, |

நெறியாளர் குழுவிற்கு நடாத்தப்பட்ட கருததரங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பரிஷ் | ப. | நோ. | கூ. | சங்கம் |
| வலிகிழக்கு (தென்பகுதி) | ,, | ,, | ,, | ,, |
| சங்கானை | ,, | ,, | ,, | ,, |

மேல்தர நடுத்தர கீழ்த்தர பணியாளர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| வலிகிழக்கு (தென்பகுதி) | ப. | நோ. | கூ. | சங்கம் |
| மானிப்பாய் பரிஷ் | ,, | ,, | ,, | ,, |
| கட்டைவேலி நெல்லியடி | ,, | ,, | ,, | ,, |
| பருத்தித்துறை | ,, | ,, | ,, | ,, |
| சங்கானை | ,, | ,, | ,, | ,, |

ஏழு ப. நோ. கூ. சங்கங்களின் மேல்தர. நடுத்தர பணியாளர்களுக்குக் கூட்டுறவுக்கல்லூரியின் இரு தடவைகளும் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு தடவையும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.



கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்குகள்

| | | | |
|---|---|---|---|
| நவாலி பண்டத்தரிப்பு கடற்றொழிலாளர் | கூ. | சங்கம் | |
| மயிலிட்டி | ,, | ,, | ,, |
| ஊர்காவற்றுறை | ,, | ,, | ,, |

ப. நோ. கூ. சங்க பிரசாரக் கூட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| புலோலி | ப. | நோ. | கூ. | சங்கம் |
| தெல்லிப்பளை | ,, | ,, | ,, | ,, |
| ஊர்காவற்றுறை | ,, | ,, | ,, | ,, |
| அருணோதய கல்லூரி அளவெட்டி | ,, | ,, | ,, | ,, |
| மானிப்பாய் இந்துக்கல்லூரி | ,, | ,, | ,, | ,, |

கடற்றொழிலாளர் கூ. சங்க பிரசாரக்கூட்டமும் கருத்தரங்கும்

சாவகச்சேரி கடற்றொழிலாளர் கூ. சங்கத்தின் கைதடி நாவற்குளி கிளை

வடமாகாண கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் சமாசக் கொக்குவில் கிளை

மயிலிட்டி கடற்றொழிலாளர் கூ. சங்கம்

நவாலி பண்டத்தரிப்பு கடற்றொழிலாளர் கூ. சங்கம்

தெங்கு பனம்பொருள் உற்பத்திக் கூ. வி. சங்கங்களின் கருத்தரங்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுன்னாகம் தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் | உ. | கூ. | ச. | | |
| பருத்தித்துறை | ,, | ,, | ,, | ,, | ,, |
| கட்டைவேலி நெல்லியடி | ,, | ,, | ,, | ,, | ,, |

### மாவட்ட கருத்தரங்கு

ப. நோ. கூ. சங்கங்களிலுள்ள பிரச்சினைகளை அறிந்து
அவற்றினைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் 10-4-74லும்,
21-6-74லும் வீரசிங்கம் மண்டபத்தில் ப. நோ. கூ. சங்
கங்களின் தலைவர்களுக்கும், பொதுமுகாமையாளருக்கும்
ஒரு மகாநாடு நடாத்தப்பட்டது. உள்நாட்டு வெளி
நாட்டு வர்த்தக அமைச்சர் மாண்புமிகு ரி. பி. இலங்க
ரத்தினாவினால் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகளுக்கும், கூட்

றவு உத்தியோகத்தர்களுக்கும் கூட்டப்பட்ட ஒரு மகாநாடு 11-8-74ல் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவுப்பாடசாலையில் 25-9-74ல் முகாமை, கணக்கியல் பற்றிய கருத்தரங்கு திரு. ஹெக்டர் டி. சில்வாவின் தலைமையிலும் 10-10-74ல் முகாமை குறித்து கருத்தரங்கு கூ. உ. ஆ. ஆணையாளர் திரு. எஸ். பி. லியனகேயின் தலைமையிலும் நடைபெற்றது.

11-10-74ல் வீரசிங்கம் மண்டபத்தில் முகாமைபற்றிய கருத்தரங்கு திரு. லியனகேயின் தலைமையில் நடைபெற்றது.

## கூட்டுறவுக் கல்லூரி

கூட்டுறவுக் கல்லூரியில் சாதாரணபிரிவு, உயர்பிரிவு என இரு பிரிவுகளாக சங்கப்பணியாளர்களுக்கும், பணியாளர் அல்லாதோருக்கும் கூட்டுறவுப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. சாதாரணபிரிவு வருடத்தில் இரு தடவைகளும், உயர்பிரிவு வருடத்தில் ஒரு தடவையும் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு சாதாரண பிரிவில் 31 பணியாளர்களும் 15 பணியாளர் அல்லாதோரும் பயிற்சி பெற்றுள்ளனர். உயர்பிரிவில் 13 பணியாளர்களும் 12 பணியாளர் அல்லாதோரும் பயிற்சி பெற்றுள்ளனர். சாதாரணபிரிவில் 22 மாணவர் சித்தியடைந்துள்ளனர். உயர்பிரிவு பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை. இவ்வருடத்தில் உயர்பிரிவில் 28 பணியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். சாதாரண பிரிவில் 30 பணியாளர்களும் 17 பணியாளர் அல்லாதோரும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

1-8-74ல் தபால்மூலமமைந்த பயிற்சி நெறியினை யாழ்ப்பாணத்திலிருந்து நெறிப்படுத்துவதற்கு அலுவலக உதவியாளர் திரு. எம். பி. மஹேசுகரன் இம்மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இப்பயிற்சிநெறி கீழ்ப்பிரிவு சாதாரணபிரிவு என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பிரிவு மாணவர்களுக்கு நடைமுறைப்பயிற்சி வகுப்புகள இக்கல்லூரியில் நடாத்தப்படுகின்றன. கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கு 10 வகுப்புகளும் சாதாரணபிரிவு மாணவர்களுக்கு 21 வகுப்புகளும் நடப்பு ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன. இக்கல்லூரியில் 23-8-74ல் வேலை அனுபவநாள் மேற்கொள்ளப்பட்டது. இங்கு பயின்ற சாதாரணபிரிவு, உயர்பிரிவு மாணவர்கள் 5 பேர்கொண்ட குழுக்களாக சங்கங்களில் நடைமுறைப் பயிற்சி பெற்றனர்.



### சாதாரண பிரிவு மாணவர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தென்மராட்சி மேற்கு | ப. | நோ. | கூ. | சங்கம் |
| 2. தெல்லிப்பளை | ,, | ,, | ,, | ,, |
| 3. அளவெட்டி மல்லாகம் | ,, | ,, | ,, | ,, |
| 4. பண்டத்தரிப்பு பரிஷ் | ,, | ,, | ,, | ,, |
| 5. வலிகிழக்கு தென்பகுதி | ,, | ,, | ,, | ,, |
| 6. புலோலி | ,, | ,, | ,, | ,, |
| 7. கராச்சி வடக்கு | ,, | ,, | ,, | ,, |

### உயர்பிரிவு மாணவர்-கணக்கு வைக்கும் முறை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தென்மராட்சி மேற்கு | ப. | நோ. | கூ. | சங்கம் |
| 2. அளவெட்டி மல்லாகம் | ,, | ,, | ,, | ,, |
| 3. சாவகச்சேரி | ,, | ,, | ,, | ,, |
| 4. சுன்னாகம் | ,, | ,, | ,, | ,, |
| 5. பண்டத்தரிப்பு | ,, | ,, | ,, | ,, |
| 6. புலோலி | ,, | ,, | ,, | ,, |
| 7. வலிகிழக்கு தென்பகுதி | ,, | ,, | ,, | ,, |
| 8. கராச்சி வடக்கு | ,, | ,, | ,, | ,, |
| 9. பச்சிலைப்பள்ளி | ,, | ,, | ,, | ,, |

### முகாமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தென்மராட்சி | ப. | நோ. | கூ. | சங்கம் |
| 2. புலோலி | ,, | ,, | ,, | ,, |
| 3. வலிகிழக்கு தென்பகுதி | ,, | ,, | ,, | ,, |
| 4. அளவெட்டி மல்லாகம் | ,, | ,, | ,, | ,, |
| 5. பண்டத்தரிப்பு பரிஷ் | ,, | ,, | ,, | ,, |
| 6. கராச்சி வடக்கு | ,, | ,, | ,, | ,, |

இக்கல்லூரியில் பின்வருவோர் விரிவுரையாற்றி வருகின்றனர்

திரு. எம். பி. மனோகரன்
,, பொ. செல்வரத்தினம்
,, கே. பி. இராசரத்தினம்
,, சு. சிவசுப்பிரமணியம்
,, ஆ. மகேஸ்வரா
,, இ. ஜெகநாதன் (பகுதி நேரம்)
,, வே. நடராசா ,,
,, பி. ஜே. சி. கனகசிங்கம் ,,

சில பாடங்களுக்கான சிறப்பு விரிவுரைகள் பின்வருவோரால் ஆற்றப்பட்டன

திரு. சு. கந்தையா
,, பொ. கோவிந்தசாமி, தலைமைக்காரியாலயப் பரிசோதகர்
,, ஹெக்டர் டி சில்வா, காரியாலயப் பரிசோதகர், தலைமைக்காரியாலயம்
,, எஸ். பி. வியனகே, கூ. உ. ஆ. ஆணையாளர்

விசேட சொற்பொழிவு ஆற்றியோர் விபரம்

திரு. வி. எஸ். இராமநாதன், கூ. உ. ஆ. ஆணையாளர்
,, வி. சத்தியநாதன், மாவட்ட கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்
,, எம். நாராயணமூர்த்தி, நெற்சந்தைப் படுத்தும் சபை
,, ரி. டி. ஜே. விதாரண, பதில். கூ. ஆ. ஆணையாளர்
,, கே. பி. இராசரத்தினம், விரிவுரையாளர், பொல்கொல கூ. கல்லூரி

கூட்டுறவு தொடர்பான நூல்களைக்கொண்ட ஒரு நூல்நிலையம் இக்கல்லூரியில் இயங்கி வருகின்றது. இந் நூல் நிலையத்தின் ஒரு பகுதி திரு. மு. மதியாபரணசிங்கம் அவர்களது நினைவுச்சபை உதவிய நூல்களைக் கொண்டதாகவும், பிறிதோர்பகுதி திரு. ஆர். சி செல்வரசு குக் அவர்கள் உதவிய நூல்களைக்கொண்டதாகவும் இயங்கி வருகின்றது. சாதாரண பிரிவு மாணவர்கள் 29-9 74லும் உயர்பிரிவு மாணவர் 15-10-74லும் கல்விச் சுற்றுலா சென்று கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கும் முறையினை பார்வையிட்டனர்.



## கூட்டுறவுத் தின விழா

அகில உலகக் கூட்டுறவு தின விழாவையொட்டி சங்கங்கள் கூட்டுறவை அடிப்படையாக வைத்து பேச்சு, கட்டுரை, கீதம், நாடகம் முதலிய போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கினர். இராமநாதன் கல்லூரியில் 13-8-74ல் நடைபெற்ற கூட்டுறவுத்தின விழாவில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மாண்புமிகு ரி. பி. இலங்கரத்தின கலந்து கொண்டார்.

## ஐக்கியதீபம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை கால் நூற்றாண்டுக்கு மேலாக நடாத்தி வந்த ''ஐக்கியதீபம்'' என்னும் திங்கள் இதழ் தொடர்ந்தும் இக்குழுவினால் வெளியிடப்பட்டு வருகின்றது. தமிழ் பேசும் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களும், தனிப்பட்டோரும் சந்தா செலுத்தி இவ்விதழினைப் பெற்று வருகின்றனர். வழக்கம்போல் இவ்வாண்டும் அனைத்துலக கூட்டுறவுத் தினத்தையொட்டி "ஐக்கியதீபம்'' கட்டுரை, கவிதைப்போட்டிகளை நடாத்தியது. கூட்டுறவு அறிவு வளர்வதற்கும், ஆக்க பூர்வமான முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் இச்சஞ்சிகையின் அவசியத்தினை உணர்ந்து மேலும் இதன் வளர்ச்சிக்கு உதவுமாறு சங்கங்களையும் கூட்டுறவாளர்களையும் வேண்டுகின்றோம். திரு. ஜி. குருகுலசூரியா எழுதிய 'இலங்கைக் கூட்டுறவு இயக்கம்; தோற்றுவாயும் வளர்ச்சியும்'' என்னும் நூலின் தமிழாக்கத்தினை தொடர்ந்து ஐக்கியதீபத்தில் வெளியிட்டு வருகின்றோம். கூட்டுறவு ஆக்க ஆணையாளர் அவ்வப்போது வெளியிட்டு வரும் சுற்றறிக்கைகள் தமிழாக்கம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றன.

## நன்றி

எமது கூட்டுறவு விரிவாக்கல் பணிகள் சகல சங்கங்களுக்கும் பயனளிப்பதற்கு ஒத்துழைப்பு அளித்த இப்பிரிவில் கடமையாற்றிவரும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (அபிவிருத்தி) திரு. சி நாகலிங்கம் கூ. உ. ஆ. ஆணையாளர் (விரிவாக்கல்) ரி. கந்தசாமி கூ. உ. ஆ. ஆணையாளர்

(எண்பார்வை) திரு. வி. மகேந்திரன் கூ. உ. ஆ. ஆணையாளர் (தெங்கு பனம்பொருள் உற்பத்தி) திரு. வி. பாலசுந்தரம் கூ. உ. ஆ. ஆணையாளர் (நிருவாகம்) திரு. எஸ் ஜெயகாந்தன் ஆகியோருக்கும், கூட்டுறவுக்காரியாலயப் பரிசோதகருக்கும், கூட்டுறவு உத்தியோகத்தருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமக்கு சகல உதவிகளை நல்கி எம்முடன் சேர்ந்து உழைத்த சங்கங்களுக்கும் எமது கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| ஒப்பம்· சு. கந்தையா | ஒப்பம்: பொ. செல்வரத்தினம் |
| தலைவர் | செயலாளர் |
| ஸ்ரீ ல. தே. கூ. சபை | ஸ்ரீ ல. தே. கூ. சபை-யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் 31-3-75 | |

---

### யாழ் மாவட்டக்குழு

அண்மையில் நடைபெற்ற யாழ் மாவட்ட வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் யாழ் மாவட்டக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் சு. கந்தையா (தலைவர்) வ. பொன்னம்பலம் (உபதலைவர்) இ. பொ. குமாரசுவாமி, ஜி. வைத்தியலிங்கம், ரி. பி. முருகையா, எஸ் டி. தர்மரத்தினம்.

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்
## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத் தழுவி எழுதப்பட்டது)

இரண்டாம் உலகப் போர் காலத்திலே நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் உச்சக்கட்டத்தை அடைந்து 4034 சங்கங்கள் நிறுவப்பட்டன. இதற்குப் பின்னர் 1945/46 ல் பலவீனமுற்ற அல்லது பொருளாதார ரீதியாக ஒப்பேற முடியாத சங்கங்களைப் பதிவழித்தும் சில சங்கங்களை இணைத்தும் சீர்ப்படுத்துதல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கால எல்லையின் முற்பகுதியிலே உறுப்பினர்களின் தொகை தொடர்ந்து அதிகரித்தது. 1945 க்கும் 1948 க்கும் இடையிலே இச்சங்கங்கள் சேவையாற்றிய நுகர்ச்சியாளரின் தொகை (உறுப்பினர் அல்லாதோர் உட்பட) 30 லட்சத்திலிருந்து 40 லட்சமாக உயர்ந்தது. மொத்த விற்பனையின் பெறுமதியும் உயர்ந்தது அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட கூ. மொ. வி. தாபனம் இச்சங்கங்களுக்கும், இச்சங்க சமாசங்களுக்கும் பொருட்களை வழங்கும் முக்கிய நிறுவனமாக விளங்கியது. இச்சமாசங்கள் பிரதேச மொத்த வியாபாரிகளாகச் சேவையாற்றின. அரிசி, மா, சீனி போன்ற பொருட்களை கூ. மொ. வி. தாபனம் வழங்கவில்லை. இப்பொருட்களை கூட்டுறவுநிறுவனங்கள் அரசாங்க வழங்கீட்டு நிலையங்களிலிருந்து பெற்றன.

1946 க்குப் பின்பு சங்கங்களின் தொகை குறையத் தொடங்கியது. 1948க்குப் பின்னர் உறுப்பினர் தொகையும் குன்றியது. ஏறக்குறைய 10 இலட்சமாக இருந்த உறுப்பினர் தொகை 1957 ம் ஆண்டு இறுதியில் 683, 852 ஆகக் குறைந்தது. ஆனால் அதே

கால எல்லையில் நுகர்வோர் சங்கங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பங்கீட்டுப் புத்தகங்களின் தொகை 50லட்சத்திற்கு மேலாக உயர்ந்தது. முற்றுகச் செலுத்தப்பட்ட பங்கு முதல் உயர்ந்து இறங்கிய, போதிலும் சட்டப்படியான ஒதுக்கீடுகள் படிப்படியாக உயர்ந்து 90 லட்சத்தை எட்டியது. 1957ம் ஆண்டு இறுதியிலே நுகர்வோர் சங்கங்களின் மொத்த விற்பனவின் பெறுமதி ரூபா 1,900 இலட்சம்.

அடுத்து வந்த ஆண்டுகளிலேயும் நுகர்வோர் சங்கங்களின் தொகை குறைந்து வந்தது. இதற்கு ஒரு காரணம் அவை ப. நோ. கூ. சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டமையே. 1958ல் இச்சங்கங்களின் தொகை 1260 ஆகக் குறைந்து விட்டது. 1965ம் ஆண்டளவில் 755 சங்கங்கள் மட்டுமே இயங்கி வந்தன. இப்பண்டசாலைச் சங்கங்கள் மூவகைப்பட்டு வந்தன:

நகர்ப்புறச் சங்கங்கள்

கிராமப்புறச் சங்கங்கள்

தோட்டச் சங்கங்கள்.

ஒவ்வொரு வகைச் சங்கத்திற்கும் உறுப்பினர்களினது (தோட்டப்பகுதிகள் அல்லாத இடங்களில் பண்டசாலைச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டிருந்த உறுப்பினர் அல்லாதோர் உட்பட) வருமானத்தையும், நுகர்வையும் பொறுத்த வரையிலும் தொழிற்பரப்பு எல்லை, பொருட்களைக் காட்சிக்கு வைக்கும் நுட்பத்தைப் பொறுத்தவரையிலும் தனிமுத்திரை பெற்றிருந்தது.

### நுகர்வோர் பண்டசாலைச் சங்கங்களின் போக்கு

| ஆண்டு | சங்கங்களின் தொகை | உறுப்பினர் தொகை | முற்றுகச் செலுத்தப் பட்டபங்கு முதல் | ஒதுக்கீடுகள் ரூபாயில் | விற்பனவு |
|---|---|---|---|---|---|
| 30- 4-46 | 4034 | — | 6,067,187 | — | 165,70[illegible],579 |
| 30- 4-48 | 3887 | 1,021,984 | 5,750,067 | 4 721 087 | 181 137,784 |
| 30- 4-51 | 3430 | 898,973 | 4,995 000 | 6,363 000 | 151,298,000 |
| 31-12-54 | 3044 | 762 018 | 5 026 000 | 8 337,000 | 175,210,000 |
| 31-12-57 | 2569 | 689,852 | 4,[illegible]88,000 | 9,721,000 | 190,019,000 |



### பண்டசாலைச் சங்கங்களின் பிரதேசவாரியான அமைவு

| மாகாணம் | சங்கங்கள் தொகை 1946 | சங்கங்கள் தொகை 1957 | உறுப்பினர் தொகை |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 1004 | 624 | 169,655 |
| தென் மாகாணம் | 699 | 440 | 82,012 |
| வட மாகாணம் | 469 | 326 | 69,907 |
| சப்பிரகமுவா மாகாணம் | 361 | 303 | 83,103 |
| மத்திய மாகாணம் | 605 | 290 | 99,769 |
| வடமேல் மாகாணம் | 406 | 253 | 89 065 |
| கிழக்கு மாகாணம் | 232 | 162 | 36,715 |
| வடமத்திய மாகாணம் | 110 | 92 | 22,759 |
| ஊவா மாகாணம் | 148 | 79 | 36,867 |
| | 4034 | 2569 | 689,852 |

நகர்ப்புறப் பண்டசாலைச் சங்கத்தைப் பொறுத்த வரை அதன் வாடிக்கையாளர் நெருக்கமான ஒரு பகுதியில் வாழ்ந்தபோதிலும், வருமானத்திலும் விருப்பு வெறுப்புகளிலும் பெரிய வேறுபாடுகள் காணப்பட்டன. கிராமப்புறப் பண்டசாலைச் சங்கங்கள் இவற்றைவிட எளிமை மிக்கவையாகக் காணப்பட்டன. ஆனால் அவ்வுறுப்பினர்களிடையே முனைப்பான கூட்டுறவு உணர்வு தென்பட்டது. குறிப்பாக, அவ்வப் பகுதியிலே உள்ள கடனுதவு சங்கங்களின் அவர்களில் பலர் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்திருந்தால் அல்லது விளைபொருள் சங்கங்களில் ஏற்கெனவே உறுப்புரிமை பெற்றவர்களாய் இருந்திருந்தால்; தோட்டப் பண்டசாலைகளைப் பொறுத்த வரை உறுப்பினர்கள் யாவரும் ஒழுங்காக நாட்கூலி பெறுபவர்கள், ஆதலால், அவர்களது கொள்வனவு சக்தி மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் நிலையானதாய் இருந்தது. தமது கொள்வனவின் பெறுமதியை தோட்ட சம்பளப்பிடியிலிருந்து கழிக்கும் சலுகையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஏனையவகை நுகர்வோர் சங்க உறுப்பினர்களுக்கு இத்தகைய வாய்ப்பு இல்லாதிருந்ததால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களுக்கு பணம் இறுதியில் செலுத்தப்படும் என்ற உத்தரவாதம் இருக்கவில்லை. ஏனையவகை நுகர்வோர் சங்க உறுப்பினர் விரும்பினால் முன் கூட்டியே

கொள்வனவுப் பிணைகளைச் சங்கத்திற்குச் செலுத்துவதற்கு வாய்ப்பிருந்தது. ஆனால் கடனின் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்பியவர்களுக்கு (இது இலங்கை நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் அனுமதிக்கப்படவில்லை) இது அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை.

கொழும்பு பண்டசாலைச் சங்கங்களின் கூட்டுறவுத் தன்மை தொடர்ந்தும் பலம் குன்றியிருந்தது. வாடிக்கையாளரில் சிறு பான்மையினரே சங்க உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் பண்டசாலையில் இணைக்கப்பட்டிருந்தன: இவ்வுறுப்பினர்கள் அல்லது அவர்களது வேலைக்காரர் பங்கீட்டுப் பொருள்களை வாங்கும் பொருட்டு பண்டசாலைக்குச் செல்லும் சமையங்களில் வேறு பொருட்கள் அங்கு கிடைக்கப் பெறுமாயின் அவற்றைக் கொள்வனவு செய்தன. விற்பனைச் சுழற்சி போதுமானதாய் இருந்ததால் இப்பண்டசாலைகள் நட்டமின்றி இயங்கக்கூடியதாய் இருந்தது. உணவுப் பங்கீட்டுத் திட்டத்தைச் செயற்படுத்தும் ஓர் அரசாங்க கருவியாகவே பலர் கூட்டுறவுப் பண்டசாலைகளைக் கருதினர். நகரப்புற கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே திட்டமிட்டு கூட்டுறவுக் கல்வி புகட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்குத் தடையாக இருந்தவை அப்பணியின் அளவும் வேறு கடமை நெருக்கடிகளுமே.

பொதுப்படையாகக் கூறுமிடத்து நட்டத்தில் இயங்காத சங்கங்கள் கூட வேண்டியளவு திறமையாக இயங்காததற்குக் காரணம் பொதுச்சபை (இவை ஒழுங்கான வாடிக்கையாளனின் ஒரு பகுதியே) நிருவாக சபைமீது போதிய கட்டுப்பாடு செலுத்தாமையும் நிருவாக சபை பண்டகசாலை முகாமையாளர் மீதும் போதிய கட்டுப்பாடு விதிக்காததாலேயே.

1951க்கும் 1957க்கும் இடையே சங்கங்களின் தொகை, உறுப்புரிமை, இணைக்கப்பட்டிருந்த பங்கீட்டுப் புத்தகங்களின் தொகை, முதல் விற்பனையின் பெறுமதி ஆகியவற்றின் புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை - பரந்தன் மாவட்டக்குழு ஆண்டறிக்கை

பரந்தன் மாவட்டக்குழு தனது கடந்த ஆண்டறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது. இரண்டாவது வருடாந்த மாவட்டக்குழுக் கூட்டத்தின் பின்பு ஏழு மாவட்டக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## இம்மாவட்டக்குழு உறுப்பினர்கள்

1. திரு. ஸ்ரீகாந்தா (தலைவர்) வவுனிக்குளம் ப. நோ. கூ. சங்கம்
2. ,, ஏ. சி. பொன்னம்பலம் (உபதலைவர்) கராச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
3. ,, ஏ. ஜி. இராசசூரியர் பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்
4. ,, வே. கதிர்காமு கரச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்
5. ,, நா. சிற்றம்பலம் துணுக்காய் ப. நோ. கூ. சங்கம்
6. ,, சு. கனகசபை திருவையாறு படித்த வாலிபர் கூ. வி. சங்.
7. ,, பொ. சிற்றம்பலம் விசுவமடுக்குளம் ப. நோ. கூ. சங்கம்
8. ,, க. யோ. ஆசிநாதர் அருணோதய ஜெளவனர் ஐ. நா. ச.
9. ,, கே. செல்லையா கூ. பரிசோதகர் பரந்தன் (நியமன உறுப்பினர்)
10. ,, செல்வி வி துரைசாமி (கோசசர உதவியாளர்) பரந்தன் (நியமன உறுப்பினர்)
11. ,, எஸ். கனகரத்தினம் அதிபர் யாழ்-இந்துக்கல்லூரி (நியமன உறுப்பினர்)

உபதலைவர் திரு. ஏ. சி. பொன்னம்பலம் காலமாகியமையால் 24-4-74ல் நடைபெற்ற மாவட்டக்குழுக் கூட்டத்தில் அன்னாருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அக்கூட்டத்தில் திரு. எ. ஜி. இராசசூரியர் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. பொன்னம்பலம் கூட்டுறவு அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பாக ஆற்றிய சேவைக்கும் சமூக வளர்ச்சிக்கும் பரந்தன் மாவட்டத்தில் செய்த தொண்டிற்கும் இம் மாவட்டக்குழு நன்றி பாராட்டி அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகின்றது.

மாவட்டக்குழுவில் காலியான இரு இடங்களுக்கு 22-10-74ல் நடைபெற்ற மாவட்டக்குழுக் கூட்டத்தில் துணுக்காய் ப.நோ. கூ. சங்க பிரதிநிதியாக திரு. நா. சிற்றம்பலமும் திருவையாறு ப. வா. கூ. வி. சங்கப்பிரதிநிதியாக திரு. சு. கனகசபையும் ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரந்தன் மாவட்டத்திலுள்ள சங்கங்களின் மொத்தத் தொகை 77

| | | |
|---|---|---|
| 1. | ஆரம்ப ப. நோ. கூ. சங்கம் | 6 |
| 2. | ஐக்கிய நா. சங்கம் | 52 |
| 3. | ஐக்கிய நா. ச. சமாசம் | 3 |
| 4. | கடற்றொழிலாளர் கூ, சங்கம் | 2 |
| 5. | படித்த வாலிபர் கூ. சங்கம் | 2 |
| 6. | தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூ. வி. சங்கம் | 3 |
| 7. | புகையிலை உற்பத்தி சங்கம் | 2 |
| 8. | பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2 |
| 9. | தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | 2 |
| 10. | சமூகநலன்புரி கூட்டுறவுச் சங்கம் | 2 |
| 11. | தச்சுத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 1 |

இம்மாவட்டத்தில் 11 கூட்டுறவுச்சங்கங்கள் சபையில் அங்கத்துவம் வகிக்கின்றன. புதிதாகப் பதிவு செய்யப்பட்ட சங்கங்களையும் ஐ. நா. சங்கங்களையும் உறுப்பினராகச் சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும்

சங்கங்களின் வளமான வளர்ச்சி கருதி கல்வி அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. முகாமைத் தொழிற்பாட்டின் வெவ்வேறு நிலைகளிலுள்ள பகுதியினருக்கு அவர்களது செயற்திறனையும், தொழில் நுட்பத் திறனையும் பெருக்கும்வண்ணம் பல பயிற்சி வகுப்புகளும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

ப. நோ. கூ. சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், ஆகியவற்றின் நெறியாளர்களுக்கும், உயர்தர, நடுத்தர, கீழ்த்தர பணியாளர்களுக்கும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், மகாநாடுகள் ஆகியவற்றின் விபரம் வருமாறு.



| | | |
|---|---|---|
| 1. | கருத்தரங்குகள் | 16 |
| 2. | கலந்துரையாடல்கள் | 4 |
| 3. | விரிவாக்கல் கூட்டங்கள் | 3 |

## விசேட மகாநாடுகள்

ப. நோ. கூ. சங்கங்களிலுள்ள பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் அறிந்து அவற்றைச் சீர்படுத்தும் நோக்குடன் இரு விசேட மகாநாடுகள் நடாத்தப்பட்டன. 12-8-74ல் நடைபெற்ற மகாநாடு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மாண்புமிகு ரி. பி. இலங்கரத்தின தலைமையிலும் 18-9-74ல் நடைபெற்ற மகாநாடு தபால் தந்தி அமைச்சர் மாண்புமிகு செல்லையா குமாரசூரியர் தலைமையிலும் நடைபெற்றன. இம்மகாநாடுகளில் சங்கங்களின் பிரதிநிதிகளும், கூட்டுறவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு கருத்துப் பரிமாறினர்.

## கல்விச் சுற்றுலா

பரந்தன் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு ஊழியர் கொண்ட ஒரு குழு தென் இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களைச் சென்று பார்வையிடுவதற்கு ஒரு கல்விச் சுற்றுலாவினை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் இச்சுற்றுலா காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## ஆக்க முயற்சிகள்

பரந்தன் மாவட்டத்தில் ஓர் உரத்தொழிற்சாலையைக் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கு அரசாங்க உரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களை அழைத்து வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதன் மேலதிக முயற்சிகள் அரசாங்க அதிபருக்கு விடப்பட்டு ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயத்தில் ஈடுபட்டுவரும் பகுதிகளுக்குக் கூடுதலான எரிபொருள் வசதிகளைப்பெறும் பொருட்டு எரிபொருள் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இது குறித்து எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் நிறைவேறும் நிலையில் உள்ளன.

விவசாயிகளுக்கு குழாய்க் கிணறுகள் அமைப்பதுபற்றிய சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

வரட்சியினுல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் நோக்கமாகவும், பாரம்பரிய முறையில் அமைந்த விவசாயத்தைப் பன்முகப்படுத்தும் நோக்கமாகவும், கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. பிரதம அதிதியாக விவசாய அமைச்சின் காரியதரிசி கலந்து கொண்டார்.

பரந்தன் மாவட்டக்குழுவிற்கென ஓர் அலுவலகத்தினை நிறுவுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக அரசாங்கத்தின்மூலம் குறிப்பிடத்தக்க ஒரு காணியையும் கட்டிடத்தையும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நன்றி

ஸ்ரீ ல தே கூ. சபையின் பரந்தன் மாவட்டக்குழு கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பாக எடுத்துள்ள எல்லா முயற்சிகளிலும் பரந்தன் கூ. உ. ஆ. ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன் ஆர்வமுடன் அளித்த ஊக்கத்திற்கும், உதவிக்கும் நன்றி கூறுகின்றோம். கூ. உ. ஆ. ஆணையாளர் (எண்பார்வை) திரு. வி. மகேந்திரன் அவர்களுக்கும் கூட்டுறவுக் காரியாலயப்பரிசோதகர்கள் கூட்டுறவு உத்தியோகத்தர்கள், சங்கங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| ம. ஸ்ரீகாந்தா | பொ. செல்வரத்தினம் |
| தலைவர் | செயலாளர் |
| ஸ்ரீ ல. தே. கூ. சபை-பரந்தன். | ஸ்ரீ ல. தே கூ. சபை-பரந்தன் |

(முற்றொடர்)

# கூட்டுறவுக் கல்வி

K. B. இராஜரத்தினம்
விரிவுரையாளர்,
(கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல)

எனவே, கிராமப்புற மக்களின் முக்கிய பிரச்சினைகளை அவர்களின் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களினூடாக நேரடியாக அறிவது தேசிய சபையின் தலையாய பணியாகும். இதுவே கல்வியை அணுகுமுறையின் அடித்தளமாய் இருத்தல் வேண்டும். கிராமப்புறக் கல்வி கீழ்மட்டத்திலிருந்து தொடங்க வேண்டும். உரையாடல்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்கள் உள்ளூர் மூலவளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவது போன்ற தீர்வுகாணப்படவேண்டிய நடைமுறைப் பிரச்சினைகளோடு தொடர்புள்ளவாய் இருத்தல் வேண்டும். உரையாடல் முறையைமிகக் கவனமாகத் திட்டமிடல் வேண்டும். செம்மையான சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான் மக்கள் கூச்சமின்றி மற்றவர்கள் எள்ளியாடக்கூடும் என்ற அச்சமின்றி தமது பிரச்சினைகளைச் சமர்ப்பித்து அவற்றிற்கான தீர்வையும் கூறுவர். குழுவின் இறுதித் தீர்மானங்கள் தலைவரினூடாகக் கல்வி விற்பன்னருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவர்கள் அவற்றினை ஆராய்ந்து வேண்டிய ஆலோசனைகளை வழங்குவர். இவ்வாறான நெறிப்பாடும் இதே வழியால் கீழே செல்லல் வேண்டும். திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு உள்ளூர்த் தலைவரைச் சார்ந்தது. இவர் உறுப்பினர்களுடன் நெருக்கமான முறையில் செயற்படுவார். சமூக, பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் உட்புற காரணிகளின் அதி முக்கியத்துவத்தினை யாரும் மறுக்க முடியாது. முன்பு கூறியதுபோல உறுப்பினர்கள் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு இரு காரணிகள்

உதவுகின்றன. அவையாயாவன: சாதனைகள் தமது கண்ணுக்குமுன் நிலைநாட்டப்படுதல், மற்றையது அச்சாதனைகளின் உறுப்பினர்களிடையே நடைபெற்ற சுதந்திரமான உரையாடல்கள்மூலம் தமக்கும் அவற்றில் பங்குண்டு என்ற உணர்வு. பொதுக் கல்வியைப் போன்று அல்லாது கூட்டுறவுக்கல்வி பொருளாதார சமூக வளர்ச்சியுடன் நேரடித்தொடர்பு கொண்டது. செயல்மூலம் கற்பது என்பது கூட்டுறவுக்கல்வியின் அடிப்படைக் கொள்கையாகும் நீந்தப்பழகவேண்டுமாயின் நீரில் குதித்தேயாக வேண்டும். இதற்கொரு நல்ல உதாரணம் உண்டு. நீச்சலைப்பற்றி வெறும் ஏட்டறிவுபெற்றிருந்த ஒரு பண்டிதரும் நடைமுறையிலே நீந்தத் தெரிந்த ஒரு மாலுமியும் ஒரு நாள் படகில் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது நீச்சல் கலையைப்பற்றி சிறந்த ஒரு சொற்பொழிவு ஆற்றினார் பண்டிதர். சடுதியாகப் படகு கவிழ்ந்தது. மாலுமி தான பண்டிதரைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கூட்டுறவுத்தத்துவத்தின் கருத்துருவங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தினால்தான் மக்கள் கூட்டுறவு அமைப்பின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். கூட்டுறவுக்கல்வி தொடர்ச்சியான ஒன்றாய் இருத்தல் வேண்டும் என்பது இன்னொரு அடிப்படைக் கொள்கையாகும். கருத்துச் செறிவான கல்வி புகட்டப்படாததினால் பல உறுப்பினர்கள் பொதுப்படையான சமூக நலன்களையும் சமூகத்தின் நலனையும் மறந்து குறுகிய தனிப்பட்ட நலன்களையே கூட்டுறவு இயக்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றனர். தொடர்ச்சியான கல்வி இல்லாவிடின் பழைய உறுப்பினர்கள் தமது அறிவை அபிவிருத்தி செய்ய முடியாதிருக்கின்றனர். புதிய உறுப்பினர்கள் சங்கத்தின் ஆரம்ப கட்டத்தில் புகட்டப்பட்ட அரிவரியைக்கூட அறிய முடியாதிருக்கின்றனர்.

இறுதியாக கூட்டுறவுக் கல்வி அவசரம் அவசரமாகப் புகட்டப்படக் கூடிய ஒன்றல்ல. நடைபயில முன்பு மக்களை ஓடும்படி வற்புறுத்துவது பேதைமையாகும். பொறுமையான தொடர்ச்சியான முயற்சிகள்மூலம்தான் மரபுவழிவந்த நடைமுறைகளைத்தகர்த்தெறியும் விருப்பத்தக்க விளைவு ஏற்படும். வளர்ச்சியுற்றுவரும் நாடுகளிலே அரசாங்கத்தின் முனைப்பும், உதவியும், தலைமையும் செம்மையான கூட்டுறவு அமைப்பைக்கட்டி எழுப்புவதற்கு இன்றியமையாதன. இத்தகைய முனைப்பான தலைமையுடன் எதிர்கால சுய நிருவாகத்திற்கும், சுதந்திரத்திற்கும் வழிகோலும் கல்வி முயற்சிகள் இணைக்கப்பட்டால் வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலே அரசாங்கங்கள் கூட்டுறவுத் துறையிலே எடுத்து வரும் முனைப்பான முயற்சிகளை வைதிக மேற்கத்திய கோட்பாடுகளைக் கொண்டு கண்டிக்க வேண்டியதில்லை. எனினும், எவ்வளவு நல்லெண்ணம் கொண்டபோதிலும் அரசாங்கத்தலையீடு வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் தடை செய்யக்கூடிய ஆபத்து உண்டு. எப்பொழுது என்றாலும் படிப்படியாக தாம் அதிகாரத்தைக் கைவிடுவோம் என அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே தெளிவாகச் சுட்டிக்காட்டத் தவறும் பட்சத்தில்.

எனவே, செம்மையான கூட்டுறவு அமைப்பிற்கு இன்றியமையாத முற்தேவை யாதெனில் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய கல்வியினைப் புத்திசாலித்தனமாகப் புகுத்தி அதனைத் தொடர்ந்து பேணிச் சாமர்த்தியமாகச் செயற்படுத்துதல். (முற்றும்)



---

## பரந்தன் மாவட்டக்குழு

அண்மையில் நடைபெற்ற பரந்தன் மாவட்ட வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் பரந்தன் மாவட்டக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் எம். ஜி. இராஜசூரியர் (தலைவர்; இ. பிரேமகாந்தன் (உபதலைவர்) வே. கதிர்காமு, எஸ் தில்லைநாதன், க. யோ. ஆசிநாதர். த. கனகசபை.

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை (மன்னார்) வருடாந்த அறிக்கை (31-3-1975)

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மன்னார் மாவட்டக்குழுவின் சார்பில் கூட்டுறவுச்சபையின் வருடாந்த அறிக்கையை மூன்றாவது வருடாந்த மாவட்டக்குழுக் கூட்டத்தில் மிக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

**அங்கத்துவம்**

மன்னார் மாவட்டத்திலிருந்து தேசிய கூட்டுறவுச் சபையில் ஆறு ப. நோ. கூ. சங்கங்களும் இரு மீனவ கூட்டுறவுச் சங்கங்களும் 3 ஐக்கிய நாணய சங்கங்களும் அங்கத்துவம் வகிக்கின்றன. மன்னார் மாவட்டத்திலுள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களையும் எமது சபையில் அங்கத்துவம் பெற விண்ணப்பிக்குமாறு தேசிய கூட்டுறவுச்சபை அன்புடன் வேண்டிக்கொள்கின்றது.

**மாவட்டக்குழுக் கூட்டங்கள்**

முடிவடைந்த வருடத்தில் மன்னார் மாவட்டக்குழு பதினொருமுறை கூடி சபையின் கல்வி அபிவிருத்தி வேலைகளைத் திட்டமிட்டும் மேற்பார்வை செய்தும் கடமையாற்றியுள்ளது. இவ்வாண்டுக்காலத்தில் எமது தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற மூன்று மதியுரைக் கூட்டத்திற்கும் ஒரு கல்வி ஆலோசனைக் கூட்டத்திற்கும் எமது தலைவர் சமூகம் கொடுத்து ஆலோசனை வழங்கியுள்ளார். 1974ம் ஆண்டு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற (2-11-74) சர்வதேச கூட்டுறவு சம்மேளனத்தின் தென் கிழக்காசியாவுக்கான சபையின் பதினொருவது மகாநாட்டில் எமது குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

1975ம் ஆண்டு பங்குனி மாதம் 12ம் திகதி தொடக்கம் 15ந் திகதி வரை எமது தலைமைக் காரியாலயத்தில் சர்வதேச கூட்டுறவுச்சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட 'கூட்டுறவுப் பிரச்சினைகளும் ஜனத்தொகைப் பிரச்சினைகளும்'' என்ற விடயம் தொடர்பாக நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் எமது சபையின் சார்பில் நானுட்டான் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. செ. மரியாம்பிள்ளை அவர்கள் கலந்து கொண்டார்கள்.

**கல்வி அபிவிருத்தி வேலைகளும் விஸ்தரிப்பு வேலைகளும்**

1974ம் ஆண்டு எமது சபை மன்னார் மாவட்டத்தில் 479 அங்கத்தவர்களுக்கு ஒன்பது பயிற்சி வகுப்புக்களையும் 101 கிளைக்குழு உறுப்பினர்களுக்கு 15 பயிற்சி வகுப்புக்களையும் 46 நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கு 5 பயிற்சி வகுப்புக்களையும் 91 பணியாளர்களுக்கு 11 பயிற்சி வகுப்புக்களையும் 1251 பாடசாலை மாணவர்களுக்கு 9 விரிவுரைகளையும் 83 பாடசாலை ஆசிரியர்களுக்கு 9 விரிவுரைகளையும் நடத்தியுள்ளது.

1974ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி கூட்டுறவாளர் தின விழாவை மன்னார் திறந்த வெளி அரங்கில் எமது சபை மிக விமரிசையாகக் கொண்டாடியது. இவ்விழாவில் விளையாட்டுப் போட்டி, மெதுவான சைக்கிளோட்டப்போட்டி, நாடகப்போட்டி இன்னிசைப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. போட்டிகளில முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு மன்னாரிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களினாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

1974ம் ஆண்டு போதிய கூட்டுறவுப் பணியாளர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்காதமையால் மன்னார் கூட்டுறவுக்கல்லூரியில் பணியாளர் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவில்லை. 1975ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் பணியாளர் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 11 பணியாளர்களும் 13 வெளி மாணவர்களும் இப்பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்று வருகின்றனர். நான்கு விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நிகழ்த்தி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள 14 மகாவித்தியாலயத்திலும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு எமது சபை விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொண்டது. தற்பொழுது மன்னார் மாவட்டத்தில 8 பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் கூ. ஆ. உ. ஆணையாளரால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் அனேகமாக எல்லாச்

சங்கங்களும் இயங்கி வருகின்றன.

எமக்குச் சொந்தமான கூட்டுறவுச் செயலகக் கட்டிடத்தில் 17,927 ரூபா 65 சதம் செலவில் திருத்த வேலைகளும் வாகன விடுதியும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில திருத்த வேலைகளை செய்வதற்கான முயற்சிகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எமது அங்கத்துவ சங்கங்களின் நலன் கருதி அயராது உழைத்து வருகின்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு ஆர். பி. ராஜகுரு அவர்களுக்கும் மன்னார் கூ. ஆ. உ. ஆணையாளர் (அபிவிருத்தி) திரு. கே. குணரத்தினம் அவர்களுக்கும் அவரின் உதவியாளர்களுக்கும் கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. எஸ். நித்தியானந்தன் (எண்பார்வை) அவர்களுக்கும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. ஜி. எஸ். தயானந்த அவர்களுக்கும் கூட்டுறவுச்சபைப் பொதுக்காரியதரிசி திரு. J.S M. De. சில்வா அவர்களுக்கும் எமது சபை நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த பல வருடங்களாக எமது மகாசபையின் பொதுக் காரியதரிசியாகக் கடமையாற்றி 1974 ம் ஆண்டு இளைப்பாறிச் சென்றுள்ள திரு. பி. வி. இலிகம அவர்களுக்கும் எமது சபை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இங்கு கூடியிருக்கும் கூட்டுறவாளர்களுக்கும் சகல அதிகாரிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மன்னார் மாவட்டக்குழு

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் மன்னார் மாவட்டக்குழு புதிய உறுப்பினர்கள்:

வண. பிறி ஹிலாரி ஜோசேப் (மன்னார் ப. நோ. கூ. சங்கம்)
திரு. S. மரியாம்பிள்ளை (நானாட்டான் பிரிவு ப. நோ. கூ. ச.)
திரு. M. S. இரத்தினசபாபதி (மாந்தை வடக்கு ப நோ. கூ. சங்கம்)
திரு. C. S. இராசதுரை (மாந்தை வடக்கு ப. நோ. கூ. ச.)
திரு. O. K. சேனுலப்டீன் (தாராபுரம் ஐக்கிய நாணய ச.)
திரு. P. ஞானமணி (மாந்தை பிரிவு ப. நோ. கூ. சங்கம்)

# 1974-75 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கூட்டுறவு வளர்ச்சி

கூட்டுறவு இயக்கம் இம் மாநிலத்தில் வேளாண்மைக் கடன் வசதி, வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதி, செய்முறை வசதி, பயன்துய்ப் போருக்கான பொருள்களை வழங்குதல் போன்ற மிக முக்கியமான துறைகளின் வாயிலாக 1974-75ஆம் ஆண்டில் தொடர்ந்து சிறந்த பணி புரிந்து படிப்படியாக முன்னேற்றம் பெற்று வருகிறது.

கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் மூலம் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குவதில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்ந்து மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்து வருகிறது. 1974-ம் ஆண்டு ஏபரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதி முடிய கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் ரூ. 79.10 கோடிக்கு குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கிச் சென்ற வருடத்திய சாதனையை விஞ்சியுள்ளன. மேலும் ரூ. 7·26 கோடிக்கு நீண்டகாலக் கடன்களையும் 31-1-1975 முடிய வழங்கியுள்ளன.

வேளாண்மைக் கடன் வழங்குதுறையில் கூட்டுறவுக்கடன் வழங்கு அமைப்பின் மூலம் தமிழ்நாடு அண்மை ஆண்டுகளில் மகத்தான முன்னேற்றத்தை எய்தியுள்ளது. உழவர்களுக்குத் தேவையான குறுகிய கால, நடுத்தரக்கால கடன்கள் கிராம அளவில் 4,923 வேளாண்மைக் கடனுதவி சங்கங்களால் அளிக்கப்படுகின்றன. வேளாண்மை கடனுதவி சங்கங்கள் மாவட்ட அளவில் சென்னை மத்திய கூட்டுறவு வங்கி நீங்கலாக 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்

டுள்ளன. 1969–70-லிருந்து வேளாண்மைக் கடனுதவி சங்கங்கள் அளித்த உற்பத்திக் கடன்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1969-70 | ... | 42·77 |
| 1970-71 | ... | 44·23 |
| 1971-72 | ... | 57·34 |
| 1972-73 | ... | 64·60 |
| 1973-74 | ... | 78·82 |
| 1974-75 | ... | 79·10 |

(31-1-1975 வரை)

கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடன்களில் கணிசமான தொகை குறைந்த நிலமுடையவர்களுக்கு (அதாவது ஐந்து ஏக்கர் நன்செய் அல்லது புன்செய் நிலங்களுக்கும் குறைவாக வைத்துள்ளவர்களுக்கு) வழங்கப்பட்டுள்ளது பெருமிதத்துக்குரியதாகும்.

அதன் விவரம் வருமாறு:

| ஆண்டு | | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1969-70 | ... | 21·18 |
| 1970-71 | ... | 24·18 |
| 1971-72 | ... | 28·08 |
| 1972-73 | ... | 32·47 |
| 1973-74 | ... | 43·31 |
| 1974-75 | ... | 42·60 |

(31-12-1974 வரை)

உற்பத்திக் கடன் வழங்குவதை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன், காலம் முடிவடைந்தும் செலுத்தப்படாமலுள்ள நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த வகையில மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பாராட்டத்தக்க செயல்முறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

(ரூ. கோடியில்)

| காலம் | | கேட்புத்தொகை | வசூல் | நிலுவை | கேட்புத் தொகைக்கும் நிலுவைத்தொகைக்கும் உள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 30—6—1972 | அன்றைய நிலவரம் | 62·08 | 55·35 | 6·73 | 10·8 |
| 30—6—1973 | அன்றைய நிலவரம் | 73·51 | 67·26 | 6·25 | 8·5 |
| 30—6—1974 | அன்றைய நிலவரம் | 86·81 | 80·59 | 6·22 | 7·1 |



இந்தியா முழுவதிலுமுள்ள கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங்கள் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன்கள்பற்றி ஆய்வு நடத்திய இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வுக் குழு, தமிழ்நாட்டிலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன்களைப் பொறுத்த மட்டில் "A" வகையின்கீழ் (அதாவது பாக்கித் தொகையில் 20 சதவீதமும் அதற்கும் குறைவாகவுள்ள வரிசையில்) இம்மாநிலத்தை வகைப்படுத்தியுள்ளது. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பது தனிச்சிறப்புக்குரியதாகும்.

உற்பத்திக் கடன்களுக்கு பெருகிவரும் தேவைகளைச் சரிக்கட்ட கிராமப்புற நகர்ப்புற சேமிப்பு வாயில்களை ஒருங்கு திரட்டுவதில் வங்கிக் கிளைகளை அதிகமாக்குதல் முக்கிய கூறாக விளங்குகிறது. முக்கியமான இடங்களில் கிளைகளைத் திறப்பதில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு உதவியளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் (1966-67) 42 கிளைகள் இருந்ததற்கு மாறாக தற்போது 328 கிளைகள் செயற்படுவது இத்திட்டத்தின் முன்னேற்றத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. 1-7-73 அன்று செயல்முறைக்கு வந்த இந்திய ரிசர்வ் வங்கியின் கொள்கைப்படி, ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் குறுகிய காலக் கடனுதவி மத்திய வங்கிகள் திரட்டும் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்படுகிறது.

குடியானவர்களின் வேளாண்மைக் கடன்களின் தேவை ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருவதால் முக்கியமாக வைப்பீட்டுத் தொகைகள்மூலம் வங்கிக்குள்ளேயே நிதிவாயில்களைத் திரட்டி வேளாண்மைக் காரியத்திற்காக அவர்களுக்கு கடன் வழங்குவது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அவசியமாயுள்ளது. பல்வேறு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக வைப்பீட்டுத்தொகை திரட்டுவதில் கண்கூடான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அது குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூ. கோடியில்)

| | | தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கி | மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | கடனுதவும் தொடக்கச் சங்கங்கள் |
|---|---|---|---|---|
| 1969-70 | ... | 12·86 | 25·33 | 3 31 |
| 1970-71 | ... | 1·195 | 29·59 | 4·21 |
| 1971-72 | ... | 19 00 | 35·63 | 4·72 |
| 1972-73 | ... | 24·43 | 44·13 | 5·42 |
| 1973-74 | ... | 37 61 | 53·47 | 6·41 |
| 1974-75 (31-12-74 வரை) | ... | 42·08 | 59·90 | 7·11 |

பொருளாதார வகையில் ஆதாயமற்ற சங்கங்களையும் நொய்ந்த சங்கங்களையும் ஆதாயமளிக்கும் சங்கங்களாக மாற்றி அவை ஆண்டு ஒன்றுக்கு குறைந்த அளவு ரூ 2 இலட்சம் கடன் பற்று வரவு கொண்டதாக செய்யும் திட்டம் 1974-75-ம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் முடிவடையும் போது சுமார் 4,750 சங்கங்கள் ஆதாயமளிப்பவையாக அல்லது ஆதாயமளிக்கும் திறன் பெற்றவையாக இருக்கும். ஆதாயமளிக்கும் திறனுடைய எல்லா சங்கங்களுக்கும் இரு ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் நிர்வாக உதவித் தொகை கொடுக்கும் ஒரு திருத்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு அளிக்கும் இந்த உதவித் தொகையைக்கொண்டு எல்லா ஆதாயமளிக்கும் திறனுடைய சங்கங்களும் இரண்டாண்டு காலத்தில் ஆதாயமளிக்கும் சங்கங்களாக மாறி விவசாயிகளின் கடன் தேவைகளை முழு அளவில் பூர்த்தி செய்யும் நிலையினை அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உழவர் சமுதாயத்தினரிடையே நலிவுற்ற நிலையிலுள்ள உழவர்களுக்குக்கடன் வசதிகள் வழங்குவது குறித்து வேளாண்மைத் தொடக்க கடன் வழங்கு சங்கங்களுக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் ஊக்கமளிக்கும் பொருட்டு தொடக்கக் கடனுதவி சங்



கங்களுக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் அவற்றின் மீளாக் கடன் சிறப்பு சேம நிதிக்கு (Special Bad Debt Reserve Fund) மொத்த மானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப் பட்டது. வறிய நிலையிலுள்ள உழவர்களுக்கு வழங்கிய கடனில் வசூலிக்க முடியாத மீளாக் கடனை பதிவாளர் முன் அனுமதி பெற்றுத் தள்ளுபடி செய்வதற்கு இந்த சேமநிதி பயன்படுத்தப்படும். 1974-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் நாள் நிலவரப்படி மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடக்கச் சங்கங்கள் இவற்றின் மீளா கடன்சிறப்புசேமநிதி முறையே ரூபா 19·12 லட்சமாகவும், ரூ 95·80 லட்சமாகவும் இருந்தது.

இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு கடனுதவிச் சங்கங்களின் மூலதனத்தை உயர்த்தி அவற்றிற்குப் போதுமான அளவுக்கு கடன் வழங்கும் திறனை அளிக்கவும் மாநில அரசு இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற்று இந்த நிறுவனங்களில்பங்கேற்கின்றது. 1974-ம் ஆண்டுமார்ச் மாதம் 31-ம் தேதிவரை கடனுதவிச் சங்கங்களில் முதலீடுசெய்துள்ளமொத்த பங்குத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கி | ... | 116.000 |
| 2. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | ... | 412.150 |
| 3. | தொடக்கச் சங்கங்களும் வேளாண்மை வங்கிகளும் | .. | 274.185 |
| 4. | தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி | ... | 170.005 |
| 5. | தொடக்க நிலவள வங்கிகள் | ... | 80 970 |
| 6 | கூட்டுறவு நகர வங்கிகள் | ... | 10.770 |
| | மொத்தம் | ... | 1074.080 |

இதைத் தவிர தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிதிரட்டும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் மாநில அரசு பங்குத் தொகை அளித்துள்ளது 1975-ம் ஆண்டு ஜனவரி 31-ம் நாள் நிலவரப்படி இக்கடனீட்டுப் பத்திரங்களில் செலுத்தி நிலுவையுள்ள தொகை ரூபா. 19 98கோடியாகும். மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ள தொகைக்கு 1973·74ம் ஆண்டில் வட்டியாகரூபா 103.41 இலட்சம் கிடைத்தது.

பஞ்சம், வெள்ளம், வரட்சி முதலியவற்றால் என்றும் எதிர்பாராத நிலைமைகளில் பல்வேறு நிலைகளிலுள்ள கூட்டுறவு கடனுதவி நிறுவனங்களின் நிதி நிலைமையை உறுதிப்படுத்துவதற்காக தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்திந்திய இராம கடனுதவி ஆய்வுக் குழுவின் பரிவுரைகளுக்கிணங்க மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடக்க கடனுதவி சங்கங்கள் ஆகியவை முறையே தத்தம் நிலைகளில் வைத்துவரும் வேளாண்மைக் கடனுதவி (உறுதி) நிதிக்கு உதவித்தொகைகள் அளித்துவருகின்றன. மாநில கூட்டுறவு வங்கியில் வேளாண்மைக் கடனுதவி (உறுதி) நிதிக்கு உதவித் தொகைகள் அளித்து வருகின்றன. மாநில கூட்டுறவு வங்கியில் வேளாண்மைக் கடனுதவி (உறுதி) நிதிக்கு அரசு இதுவரை ரூ. 177.75 லட்சம் அளித்துள்ளது. இதற்கு இந்திய அரசுஉதவி அளிக்கிறது. இந்த நிதி வரட்சி, வெள்ளம், புயல் முதலியவற்றால், பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகிற போதெல்லாம் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. உழவர்களுக்கு நிவாரணமளிக்க 1973-74ம் ஆண்டு இறுதி வரையில் ரூ. 19·08 கோடி குறுகிய காலக் கடன்கள் நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்பட்டன. நடப்பு ஆண்டில் இதற்கு முன் ஏற்பட்டிராத அளவில், ஏற்பட்ட கடுமையான வரட்சி காரணமாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு 20 கோடி ரூபாய் குறுகியகாலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இறுதியாகத் தயாரிக்கப்பட்டு இவை ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப் படவிருக்கின்றன.

இம்மாநிலத்தில் தென் ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகுதிபெற்ற உழவர்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் பல்வேறு நோக்கங்களுக்காக கடன்கள் வழங்க வகைசெய்வதே இந்தத் திட்டப் பணியை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கத்தின் பங்காகும். இத்திட்டம் 1971 – 72-லிருந்து செயற்படுத்தப்பட்டு



வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி விபரம் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| சிறுவர் உழவர் மேம்பாட்டு நிறுவனங்கள் | 1971-72 | 1972-73 | 1973-74 | 1974-75 (31-12-74 வரை) |
|---|---|---|---|---|
| 1. மதுரை ... | 112·19 | 91·03 | 127·24 | 107·61 |
| 2. தென்னாற்காடு ... | 80·77 | 118·58 | 159 56 | 176·43 |
| 3. திருநெல்வேலி ... | 8 69 | 45·95 | 50·81 | 52·46 |

சிறு நில உடைமையாளர் வேளாண்மைத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனம் பற்றிய திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் ஆகிய இரண்டுவளர்ச்சி வட்டாரங்களிலும் சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி, பெத்த நாயக்கன் பாளையம் ஆகிய இரண்டுவளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அடைந்த முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

(ரூபாய் இலட்சத்தில்)

| | 197'-72 | 1972-73 | 1973-74 | 1974-75 (31-12-74 வரை) |
|---|---|---|---|---|
| 1. சேலம் ... | 24-45 | 30,00 | 45 25 | 62·25 |
| 2. வட ஆற்காடு ... | 4-60 | 18 68 | 20·24 | 6·13 |

சிறுநில உடைமையாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆட்டுக்கிடாரி, ஆட்டுக்கடா, கோழிகள், கறவைப் பசுக்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகவும் ஆடு வளர்த்தல், காளைக் கன்று வளர்த்தல், வாத்து வளர்த்தல், முதலியவற்றிற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் ஏழு மாவட்டங்களில் செயற்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

நீண்டகாலக் கடன்

இம் மாநிலத்திலுள்ள உழவர்களின் நீண்ட காலக் கடன்தேவையைதமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் நிறைவு செய்கின்றன. புதிய கிணறுகள் தோண்டுதல் கிணறுகளை ஆழப்படுத்துதல், மின்சார மோட்டார்கள், எண்ணெயில் இயங்கும் பொறிகள் விசையேற்றங்களை வைக்கக் கொட்டகை அமைத்தல் பாசனப் பயனுக்காக குழாய்களை அமைத்தல் நிலங்களைப் பண்படுத்துதல் டிராக்டர்கள் போன்ற வேளாண்மை யந்திரங்களை வாங்குதல் இவைபோன்ற வேளாண்மை உற்பத்திக் காரியங்களுக்காகவே நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகையில் ஏறத்தாழ 90 சதவீதம் வழங்கப்படுகிறது. எளிதுபடுத்தப்பட்ட கடன் வழங்கும் முறைகளினுலும் கொள்கைகளினுலும் சிறு பாசனத் திட்டங்களுக்கும் இதர திட்டங்களுக்கும் நீண்ட காலக் கடன் வழங்குவது அனுகூலமாக உள்ளது. 1968 – 69 முதல் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் வேளாண்மை வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதில் பகுதி வாரியான திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

நாளதுவரை 38 சிறு பாசனத் திட்டங்களும் 11 சிறு பாசனமல்லாத திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர 26 சிறுபாசனத் திட்டங்களும் ஒரு சிறு பாசனம் அல்லாத திட்டமும் வேளாண்மை மறுநிதி உதவிக்கழகம் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து, உதவி பெற்று அளிக்கும் மறுநிதியினுலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து நாடுகள் வளர்ச்சித் திட்டம் தமிழ் நாட்டில் 1971-ம் நவம்பர் திங்கள் 2-ம் நாள் முதல் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 46·76 கோடி ரூபாய். இத்திட்டத்திற்கு (அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகம்) அளிக்கும் நிதிஉதவி ரூபா. 26·25 கோடியாகும். இதில் ஒதுக்கப்பட்டுள்ள சிறு பாசன திட்டங்களுக்கான ரூ. 18.05 கோடியும் நில சீரமைப்பிற்கான ரூ. 0 55 கோடியும் முழுவதும் பெறப்பட்டுவிட்டன.

(வளரும்)

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் - பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.